வரையறுத்த லெகோ செயற்திட்டங்கள் (தனியார்) கம்பனி - 2024

---

1. நிதிக்கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த லெகோ செயற்திட்டங்கள் (தனியார்) கம்பனியின் ('கம்பனி') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெமபர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கம்பனி 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பில் நிட்சயமற்ற பொருண்மை

நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இல. 2.1 இற்கு எனது கவனத்தை ஈர்க்கின்றேன். 2013 ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்களின் போது மின்சார விநியோகத்திற்காக உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதற்கான அதன் பிரதான நடவடிக்கைகளை கம்பனி நிறுதித்தியிருதியிருந்தது. குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டவாறு கம்பனியானது 2024 திசெம்பரர் 31 உள்ளவாறு ரூபா 18,982,129 ஆன இலாபம் ஏற்பட்டிருந்தது. (2023- ரூபா 20,498,361) மற்றும் மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு ரூபா 1,516,232 ஆன வரிக்கு முன்னரான நட்டத்தை பதிவுசெய்திருந்தது. (2023 – வரிக்கு முன்னரான இலாபம் ரூபா 2,014,248). கம்பனியானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,018,871 சாதகமான தேறிய சோத்து நிலையை பதிவு செய்திருந்தது. (2023- ரூபா 4,502,639) அதன் விலை கூறிய பங்கு முதலை விட அதன் தேறிய சொத்து அரைவாசியாக இருந்தது. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதகாரச் சட்டத்தின் 220 ஆம் பிரிவின் கீழ் நிர்ணயிக்ப்பட்டவாறு மூலதன நிலையில் பாரதூரமான நட்டத்தை

குறக்கின்றது. பிரதான வியாபார நிலைய நிறுத்தியதை சேர்த்து இந்த நிலைமை கம்பனியினுடைய தொடர்ந்தியங்கும் நிலைய தொடருவதற்கான இயலுமையை குறிப்பிடத்தக்களவு ஐயத்திற்கிடமாக இருக்கின்றதென முக்கியமற்ற பொருண்மையின் உள்ளதன்மையை குறிக்கின்றது. எவ்வாறாயினும், அதே குறிப்பில் வெளிப்படுத்தப்படவாறு அதன் தாய் கம்பனியிலிருந்து நிதி உதவியை பெறுவதற்கு கம்பனி தொடர்கின்றது. வரையறுத்த லங்கா மின்சார (தனியார்) கம்பனி நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு தொடர்ந்து செல்லும் அடிப்படை கம்பனிக்கு இயலக்கூடியதாக இருந்தது.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த

இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.6 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

1.6.1 கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

குறித்த நியமங்களிற்கான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
LKAS 2 இன் 09 ஆம் பந்தியின் பிரகாரம் பொருளிருப்புக்கள் குறைந்த கிரயம் அல்லது தேறிய தேறத்தக்க பெறுமதியில் மதிப்பிடப்பிட வேண்டும். எவ்வாறாயினும் ரூபா 4,827,898 மற்றும் ரூபா 6,729,463 பெறுமதியான முறையேற மூலப்பொருட்கள் மற்றும் இறுதிப் பொருட்கள் இருப்புக்களின் தேறத்தக்க பெறுமதியை கருத்திற்கொள்ளாமல் கிரயத்தில் மதிப்பிடப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் பொது மூப்பொருட்கள் மற்றும் இறுதிப் பொருட்களிற்காக பௌதீக மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வு அவதானிப்பக்கள் முறையாக தெரியப்படுத்தப்பட்டது. 2025 மே 9 இல் நடைபெற்ற கூட்டத்தின் போது பணிப்பாளர் சபையால் அனுமதிக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய சொத்துக்கள், பொருளிருப்புகள் மற்றும் LECO செற்திட்ட தனியார் கம்பனியிக்கு சொந்தமான இருப்பு விடயங்கள் மெய்மையாய்வு செய்து அறிக்கையிடுவதற்கு கணிப்பீட்டுச் சபை (BOS) குழு நியமிக்கப்பட வேண்டியிருந்தது. பின்னர் இதன்படி நடவடிக்கைகள் அமுலாக்கப்படும்.	LKAS 2 இற்கமைய குறைந்த கிரய அல்லது தேறத்தக்க பெறுமதியில் பொருளிருப்புகள் பெறுமதியிடப்படுகின்றதை உறுதிப்படுத்துவதுடன் உண்மைத் தன்மை மற்றும் உள்ள தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பௌதீக மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டும்.

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
(அ)	முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் லங்கா மின்சாரக் கம்பனியின் (LECO) களஞ்சியம் மற்றும் வரையறுத்த AMTI LECO (தனியார்) கம்பனி வளவிற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ரூபா 5,159,044 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு கணக்கேடுகளிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.	அவதானிப்பகள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கைதவிர்ப்பு நடைமுறைகள் வினைத்திறனாக மற்றும் சகல உரிய பிரமாணங்களுடன் இணங்கி மேற்கொள்ளப்படும்.	கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக் கூற்றுக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் உணமையான சமர்ப்பிப்பை உறுதிப்படுத்துவதற்கு உரிய காலத்தில் கணக்கேடுகளிலிருந்து கைதவிர்க்கப்பட்ட சொத்தினை அகற்றப்பட வேண்டும்.
(ஆ)	ரூபா தொகையான பெறவேண்டிய பிடித்து வைத்தல் வரி மீளாய்வாண்டிற்கான அறவிட வேண்டியவையாக காட்டுவதற்கு பதிலாக நிதிக் கிரயமாக தவறாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. இதன்விவைால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கிரயம்	இந்த தொகை நடைமுறை சொத்தாக வகைப்படுத்துவதற்கு பதிலாக தவறாக செலவினமாக பதியப்பட்டிருந்தது. இந்த தவறான வகைப்படுத்தலை திருத்துவதற்கு உடனடியாக சரியான நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.	கணக்கை திருத்துவதற்கு பெறவேண்டிய பிடித்து வைத்தல் வரி மீள வைகப்படுத்துவதுடன் நிதி அறிக்கையிடலின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முறையான மீளாய்வு

அதிகரித்துக் காட்டப்பட்டதுடன் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் காலப்பகுதிக்கான இலாபம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. .		நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.6.3 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
கம்பனியானது 2013 ஆம் நிதியாண்டின் போது மின்சார விநியோகத்திற்காக வழங்குகின்ற உட்கட்டமைப்பு வசதிகளின் பிரதான வியாபார நடவடிக்கைகளை நிறுத்தியிருந்தது. கம்பனியானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,982,129 ஆன திரண்ட இலாபம் 2023 - ரூபா 20,498,361) அடைந்திருந்ததுடன் ஆண்டின் இறுதியில் ரூபா 1,516,232 வரிக்கு முன்னரான நட்டத்தை பதிவு செய்திருந்தது. (2023 ரூபா 2,014,248 வரிக்கு முன்னரான நட்டம்). கம்பனியானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,018,871 சாதகமான தேறிய சொத்து பதிவு செய்திருந்த (2023- ரூபா 4,502,639) போதிலும் தேறிய சொத்துக்கள் விலைகூறிய மூலதனத்தை விட அரைவாசி குறைவாக இருந்தது. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 220 ஆம் பிரிவின் பிரகாரம் குறிப்பிடப்பட்டவாறு மூலதன நிலையில் பாரிய நட்டங்களை குறிக்கின்றது. பிரதான வியாபாரங்களுடன் சேர்த்து அந்த நிலமைகள் தொடர்ந்து செல்லும் தன்மையை தொடருவதற்கு கம்பனியினுடைய இயலுமை ஐயத்திற்கிடமாக இருக்குமென சில முக்கியமறற பொருண்மையில் உள்ளதன்மையை குறிக்கின்றது.	பணிப்பாளர் சபை இந்த விடயத்தில் விரிவாக விவாதித்துள்ளது. இந்த விலகளிற்கு நிரந்தர தீர்வாக மற்றும் 2025 மே 9 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட தீர்வுக்கமைய கம்பனியானது தற்போது கணக்கொழிப்பு நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளன. இணக்கத்தை உறுதிப் படுத்துவதற்கும் கலைப்பை எளிதாக்குவதற்கும் உடனடியாக அவசியமான நடவடிக்கை அமுலாக்கப்படும்.	சபையானது கம்பனியினுடைய நிதி நிலைமையை மதிப்பாய்வு செய்ய வேண்டியதுடன் கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 220 ஆம் பிரிவின் கீழ் மீள்கட்டமைப்பு அல்லது கணக்கழிப்பு போன்றவற்றில் தேயான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மூலதன வினைத்திறனை வெளிப் படுத்துவதற்கும், நியதிசட்ட வேண்டுகையுடன் இணங்குவதை உறுதிப்படுத்துவதற்கும் அவசியமான நிபுணத்துவ ஆலோசனையை பெறுவதற்கும் செயல் நடவடிக்கை திட்டம் மேம்படுத்தப்பட வேண்டும்.

1.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.7.1 பெறவேண்டியவைகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 9,454,718 தொகையான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள் நீண்ட காலமாக நிலுவைகளாக இருந்தன. அந்த மீதிகளில் ரூபா 7,412,245 தொகையான (அண்ணளவாக 78 சதவீதம்) வெளித் தரப்பினரிடமிரந்து (ஏனைய) பெறவேண்டியவையாக இருந்தன. எவ்வாறாயினும் அறவீட்டு வசதிக்காக கம்பனியால் முறையாக கட்ன்பட்டோர் பெயர் பட்டில், காலப்பகுப்பாய்வு, ஆதாரமான ஆவணங்கள் மற்றும் மூலச் சான்றுகள் பேணப்பட்டிருக்கவில்லை. பெறவேண்டியவைகளின் கணிசமான பகுதிக்காக உள்ளபடியான பதிவெடுகள் மற்றும் ஆதாரமான ஆவணங்களை பேணுவதற்கு தவறியமையால் திறமையீனமான கடுமையாக முகாமைத்துவ மற்றும் நலிவான உள்ளக் கட்டுப்பாட்டை வெளிப்படுத்துகின்றது.	கணக்காய்வாளருடைய அவதானிப்பகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் தெளிவு படுத்தவதற்காக அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் கம்பனியினுடைய கணக்கொழிப்பு நடைமுறையின் போது கடன் பட்டோரை இனங்கானல் பூர்த்தியாக்கப்படும்.	சகல நிலுவையாக இருக்கின்ற அறவிட வேண்டிய மீதிகளும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.8. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

நட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 220 ஆம் பிரிவு	இந்த பிரிவின் பிரகாரம் கம்பனியினுடைய தேறிய சொத்து விலைகூறிய பங்கு மூலதனத்தின் 50 சதவீதத்திற்கு கீழே உள்ளது. சபை கம்பனி அதிகாரச்சட்டதின் வேண்டுகையை நிறை வேற்றுவதற்கு விசேட பொதுக் கூட்டத்தை அழைத்திருந்தது. கம்பனியினுடைய தேறிய சொத்தக்கள் தேவையான மட்டத்திற்று கீழே இருந்ததுடன் அத்தகைய கூட்டம் நடை பெற்றிருக்கவில்லை. மேலும் கம்பனி 2013 இல் அதன் பிரதான வியாபார செயற்பாடுகளை	பணிப்பாளர் சபை இந்த விடயத்தில் விரிவாக விவாதித்துள்ளது. இந்த விலகளிற்கு நிரந்தர தீர்வாக மற்றும் 2025 மே 9 ஆந் திகதி அனுமதிக்கப்பட்ட தீர்வுக்கமைய கம்பனியானது தற்பொது கணக்கொழிப்பு நடவடிக்கைகள் செயற்பாட்டில் உள்ளன. இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கும் கலைப்பை எளிதாக்குவதற்கும் உடனடியாக அவசியமான நடவடிக்கை அமுலாக்கப்படும்.	சபையானது கம்பனியினுடைய நிதி நிலமையை மதிப்பிடுவதற்கும் பங்குமுதல் மீள்கட்டமைப்பு அல்லது கணக்கொழிப்பு போன்ற முறையான அளவீடுகளில் தீர்மானிப்பதற்கும் கம்பனி அதிகாரச் சட்டத்தில் வேண்டப் பட்டவாறு உடனடியாக தெரிப்படுத்தப்பட வேண்டும்.

	நிறுத்தியிருந்ததுடன் 2013 இல் முக்கியமற்ற செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறுத்தியிருந்த போதிலும் பல ஆண்டுகளாக கம்பனிச் செயற்பாடுகளை கணக்கொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

2. நிதி மீளாய்வு

2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 1.5 மில்லியன் தொகையான இலாபமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 2 மில்லியன் தொகையாகும். ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 3.5 மில்லியன் தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. சகல செயற்பாடுகளும் செயற்படாமை, முன்னைய ஆண்டில் மொத்த நட்டத்தை நீக்கல் என்பன இந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாக இருந்தன.

2.1.1 விகிதப் பகுப்பாய்வு

அ) கம்பனியின் நடைமுறை விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 1.2 முதல் 1.3 வரை அதிகரித்திருந்தது

ஆ) கம்பனியின் உரிமை மூலதனத்திற்கான வருவாய் சகல செயற்பாட்டு நடவடிக்கைகளும் செயற்படாமையால் ஏற்பட்ட தெமாத்த நட்டங்களை நீக்கியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது (44.7) சதவீதத்திலிரந்து 25.2 சதவீதம் வரை அதிகரித்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
கம்பனியின் பிரதான வியாபாரமாவுள்ள மின்சார கம்பங்களின் உற்பத்தி 2013 ஆம் ஆண்டில் தரப் பரிசோதனையில் தயறியமையால் கமபனியால் நிறுத்தப்பட்டிருந்தது. ஆகவே, கம்பனியானது மீளாய்வாண்டு இறுதிவரை கம்பங்களின் தரத்தை அதிகரித்தல் அல்லது இனங்காணப்பட்ட வேறு ஏதாவது பொருத்தமான வியாபாரங்கள் மீளத் தொடங்கியிருக்கவில்லை. ஆகவே, கம்பனியானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18.98 மில்லியன் திரண்ட நட்டத்தை பதிவு செய்திருந்தது.	சொல்லப்பட்ட நிர்மாண செயற்திட்டம் தொடர்புபட்ட பிரதான முலதன நிலையாக ரூபா 25,000,000.00) உள்ளது. எனவெ, தொடர்புபட்ட திரண்ட நட்டம் பதியப்பட்டிருந்தது. மேலும் நடவடிக்கைகள் முன்னரே அமுலாக்கப்பட வேண்டும்.	முகாமைத்தவம் கம்பனியில் ஏற்படுகின்ற நட்டங்கள் மீது முறையான தீர்மானம் எடுக்க்பபட வேண்டும்.

3.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பயன்படுத்தாமை அல்லது குறைபயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் ரூபா 5.2 மில்லியனாக இருந்ததுடன் அந்த சகல சொத்துக்களும் 2013 இலிருந்து பயன்படுத்தப்படாதிருந்தது.	அந்த சகல சொத்துக்களும் பூச்சிய பொறுமதியாக பதிவழிக்கப் பட்டிருந்ததுடன் களஞ்சியப் படுத்தலிற்காக வஸ்கடுவ மத்திய களஞ்சியத்திற்கு அனுப்பட்டிருந்தது.	நிறுவனத்தின் வளங்கள் ஆகக்கூடிய நலனைப் பெறுவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

4.1 கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரைகள்
மீளாய்வாண்டிற்கான உபாய திட்டம், செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் கொள்வனவு திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	காலக் கிரமத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும்.	உபாய திட்டம், செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் கொள்வனவு திட்டம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்